பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 01 | வெள்ளிக்கிழமை | 18.10.2024 | அதிர்வு 77

## தம்பலகாமத்தில் கைகலப்பு! குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோயிலடி பகுதியில் நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 06



# சகலருக்கும் சம உரிமை!

### தமிழருக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை என ரில்வின் சில்வா சொல்லியிருக்கமாட்டாராம் என்று கூறுகின்றார் பிமல் ரத்நாயக்க

(கி.வசந்தன்)

"தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்று ரில்வின் சில்வா தெரிவித்தமை தொடர்பாக நான் கேள்விப்படவில்லை. அவ்வாறான ஒரு கருத்தை ரில்வின் சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை. இலங்கையில் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்."

-இவ்வாறுதேசியமக்கள்சக்தியின்முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். 06

## கிளிநொச்சியில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளருக்கு ஓஸியில் அரசாங்க விடுதி வசதி

### இரண்டு வருடங்களின் பின்னர் இப்போது விடயம் அம்பலம்




(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் இணைப்பாளருக்குப் பயன்பாட்டுக்குஎன்னும்பெயரில்அரசசெயலகத்தின் விடுதி இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டமை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்டமேலதிகஅரசஅதிபருக்கு வழங்கப்பட வேண்டிய விடுதியே இப்படி அரசியல்வாதியான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் தனிப்பட்ட அலுவலரான அவரது இணைப்பாளருக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

2020ஆம் ஆண்டு 06




தேர்தலின் போது வாக்களிக்கின்ற வாக்குச் சீட்டுகளில் கட்சியின் பெயர் அல்லது சுயேச்சைக் குழுவின் இலக்கம் ஆகியவற்றோடு அந்தக் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னமும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஆனால் இவையெல்லாம் வெள்ளைத் தாளில் கறுப்பு மையினால் அச்சிடப்பட்டவையாக இருக்கும். வர்ணத்தில் வாக்குச் சீட்டு அச்சிடப்படுவதில்லை.

ஆனால் அந்த வாக்குச் சீட்டில் குறிப்பிடப்படும் சின்னம் தொடர்பில் சில தரப்புகள் தங்கள் எண்ணப்படி வியாக்கியானங்கள் கூறி வருவதைப் பார்க்க சிரிப்பாக இருக்கிறது.

அந்த வகையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா தலைமையிலான சுயேச்சை குழு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றது.

அது தன்னுடைய சின்னத்தை மாம்பழம் என அடையாளப்படுத்தி 06




### பழைய முகங்களைப் புறம் தள்ளி

# இளையோரை நாடாளுமன்றத்துக்கு இம்முறை அனுப்ப வேண்டும் தமிழர்

## தமிழ் மக்களிடம் மணிவண்ணன் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

“கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் இருந்தவர்களைப் புறம் தள்ளுங்கள். கறைபடியாத கரங்களுடைய இளையோரை இம்முறை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வையுங்கள்.”

– இவ்வாறு தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் தகுதியான வேட்பாளர்களுடன் களமிறங்கியுள்ளோம்.

இந்தத் தேர்தல் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தியல் காணப்படுகின்றது.

தென்னிலங்கை மக்கள் பழைய ஆட்சியாளர்களைத் துடைத்தெறிந்து, ஊழலற்ற, நேர்மையான அரசியல்வாதிகளைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தோடு உள்ளார்கள்.

அதனால், தென்னிலங்கையில் இருக்கக்கூடிய பல மூத்த அரசியல்வாதிகள் தேர்தலில் இருந்து விலகியுள்ளனர். ஆனால், வடக்கு அரசியல்வாதிகள் தொடர்ந்து போட்டியிட வேண்டும் என்ற பேரவாவுடன் மீண்டும் களமிறங்கியுள்ளனர்.

வடக்கில் எமது கட்சித் தலைவர் சி . வி விக்னேஸ்வரன் மாத்திரம்தான் தேர்தலில் இருந்து விலகி இளையோரிடம் கையளித்துள்ளார். மற்றையவர்கள் 15 வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்தில் இருந்தும் மக்களை எதுவும் செய்யாத நிலையிலும் தொடர்ந்தும் எம்.பி. பதவிக்கு ஆசைப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் இருந்தவர்களுக்கு ஓய்வு வழங்க வேண்டும். வடக்கிலும் ஓர் அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும். அதனால்தான் கற்றறிந்த இளையோரை நாங்கள் களமிறக்கியுள்ளோம். தமிழ் மக்கள் எங்களுக்கு ஒட்டுமொத்த ஆதரவையும் தர வேண்டும்.

நாங்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை வீணடிக்காது செயற்படுவோம். தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் ஆளுமைமிக்க – ஆற்றல் உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகள் ஒரு கண் எனில் நீடித்த பொருளாதாரமும் மற்றைய கண்ணாக இருக்க வேண்டும். இரண்டு கண்களும் தமிழ் மக்களுக்குத் தேவையானது. நாம் இரண்டையும் சேர்த்தே முன்னெடுத்துச் செல்வோம்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றை நிர்வகித்துள்ளோம். அதில் எங்களுடைய நிர்வாக ஆளுமைகளைக் காட்டியுள்ளோம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை முன்னெடுத்துச் சென்ற அதேவேளை பொருளாதாரத்தையும் முன்னெடுத்துச் சென்றோம்.

நாம் யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றில் ஆட்சியில் இருந்த கால பகுதியில்தான் கொரோனாத் தொற்றும் அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடிகளும் ஏற்பட்டன. அவ்வாறான இடரான காலப் பகுதியில் 45 உறுப்பினர்களைக் கொண்ட மாநகர சபையில் நாங்கள் 10 உறுப்பினர்களுடன் வினைத்திறன் செயற்பட்டோம்.

நாடு பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீளாத போதிலும் தற்போதும் தென்னிலங்கை கட்சிகள் இனவாத சிந்தனைகளுடன்தான் காணப்படுகின்றன. எனவே, தென்னிலங்கை கட்சிகள் வடக்கில் கால் பதிப்பது ஆபத்தானது.”

– என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் ஏனைய வேட்பாளர்களான மிதிலைச்செல்வி சிறீ பத்மநாதன், உமாகரன் இராசையா, வரதராஜன் பார்த்தீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வலி. வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி கவனம்

## தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் உள்ள காணிகள் விடுவிப்பு சம்பந்தமாக ஏற்கனவே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கவனம் செலுத்தியுள்ளார் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பொது அமைப்புக்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இராணுவ வசமுள்ள காணிகள் விடுவிப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அதன்போது, காணி தொடர்பாகவும், மீள்குடியேற்றம் தொடர்பாகவும் பல கோரிக்கைகளை முன்வைத்து பலர் தமது மன ஆதங்கங்களையும் வேதனைகளையும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரமிடம் வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்த சந்திரசேகர், "வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் உள்ள காணிகள்



விடுவிப்பு சம்பந்தமாக ஏற்கனவே ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் அது தொடர்பான விவரங்களையும் கோரியுள்ளார்.

எனவே, வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள காணிகள் பெரும்பாலானவற்றை அரசு விடுவிக்கும்." – என்றார்.

# தமிழர்களுக்கே வாக்களியுங்கள்!

## 'மான்' சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் மிதிலைச்செல்வி வேண்டுகோள்




(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள தமிழர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள தமிழர்களுக்கே வாக்களிக்க வேண்டும். பெரும்பான்மைக் கட்சிகளுக்கு வாக்களிப்பது மிக ஆபத்தானது.

அதேவேளை, பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இழப்புக்களைப் பெருமளவில் சந்தித்தவர்கள் பெண்களே. அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்." – என்றார்.

# பொதுத் தேர்தல் தொடர்பாக 257 முறைப்பாடுகள் பதிவு

பொதுத் தேர்தல் தொடர்பாக இதுவரை 257 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெறப்பட்ட புகார்கள் அனைத்தும் சட்டத்தை மீறியவை எனத் தெரிவித்துள்ளது.

பெறப்பட்ட புகார்களில் 181 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டு, மேலும் 76 புகார்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பாதுகாப்புச் செயலாளருடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு





இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இலங்கை விமானப்படைக்கு புதிய விமானமொன்றை நன்கொடையாக வழங்கியமைக்காக பாதுகாப்பு செயலாளர் இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

# வேட்பாளர்களின் தகவல்களை அறிந்துகொள்ள பப்ரல் அமைப்பால் விசேட வேலைத்திட்டம்

பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் தகவல்களை உரிய முறையில் அறிந்துகொள்வதற்காக பப்ரல் அமைப்பு விசேட வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளது.

எதிர்வரும் சில தினங்களுக்குள் சமூக வலைத்தளங்களின் ஊடாக அதனை வாக்காளர்களுக்காக வெளியிடவுள்ளதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

“உங்கள் எதிர்கால நாடாளுமன்ற உறுப்பினரை அறிந்துகொள்ளுங்கள்“ என்ற தொனிப்பொருளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டின் அனைத்து தேர்தல் வேட்பாளர்களின் தகவல்களையும் ஒன்றுசேர்ப்பதற்கும் அதனை சமூகத்தில் முன்வைப்பதற்குமாக இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய வேட்பாளர்கள் தாம் தொடர்பிலும் தமது விருப்பு இலக்கம் தொடர்பிலும் நாடாளுமன்ற தேர்தலில் தாம் போட்டியிடுவதற்கான நோக்கம் தொடர்பிலும் மக்களை தெளிவுபடுத்தும் வாய்ப்பு கிடைக்கப்பெறும் என அவர் கூறியுள்ளார்.

வாக்காளர்கள் தமது வாக்குகளை பயன்படுத்துவதற்கு முன்னதாக தமது வேட்பாளர்கள் தொடர்பான அடிப்படை தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான ஒரு நடைமுறையாக இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரசாங்கம் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது

## முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"2028 ஆம் ஆண்டளவில் இலங்கை வெளிநாட்டு கடன் செலுத்தலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன்னதாக மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது உள்ளிட்ட பல சவால்களுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு – ப்ளவர் வீதியில் உள்ள புதிய ஜனநாயக முன்னணியின் கட்சி காரியாலத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அடுத்த நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்களில் இருந்து விலகிச் செல்லாத பொறுப்புக்களுடன் கூடிய குழுவொன்று அவசியம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கேஸ் சிலிண்டர் சின்னத் திலும், புதிய ஜனநாயக முன்னணியிலும் போட்டியிடும் தரப்பிற்கு நான் தலைமைத்துவம் வழங்குவேன்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து முன்னோக் கிச் செல்வதற்குத் தன்னுடன் இருந்த அனுபவமிக்கவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும்.

இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைச் செலுத்தத் தொடங்கும் 2027ஆம் ஆண்டுக்குள் அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 வீதமாக்கும் சவாலைப் புதிய அரசாங்கம் எதிர்கொள்ளும்.



அந்த இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு வருடமும் ஒரு சதவீதப் பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும்.

பொறுப்புகளிலிருந்து தட்டிக்கழிக்காத அனுபவம் வாய்ந்த அணிதான் அடுத்த நாடாளுமன்றத்திற்குத் தேவை.

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து நாட்டை மீட்டெடுக்கத் என்னுடன் இணைந்து செயற்பட்ட குழுவினர் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டி யிடவுள்ளனர். அந்தக் குழு வெற்றி பெற வேண்டும்." – என்றார்.

# தபால் மூல வாக்களிப்புக்கு 750,000 விண்ணப்பங்கள்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற் காக 750,000 தபால் மூல விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பவர்களுக் கான வாக்காளர் பட்டியல் அத்தாட்சிப்படுத்தல் நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அத்துடன், தபால் மூல வாக்குச்சீட்டுகள் எதிர்வரும் 23ஆம் திகதி அஞ்சலிடல் பணிகளுக்காகக் கைய ளிக்கப்படவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு 5 நாள்கள் இடம்பெறவுள்ளன.

இதன்படி, பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்க ளிப்பு மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்களில் இந்த மாதம் 30 ஆம் திகதியும் அடுத்த மாதம் 4 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

அத்துடன், ஏனைய அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4 ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

மேற்படி தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7ஆம், 8 ஆம் திகதி வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோய் பரவும் அபாயம்



இந்த வருடத்தில் இதுவரை பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 40,958 ஆக உயர்ந் துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகா ணத்தில் பதிவாகியுள்ளதுடன், அதன் எண்ணிக்கை 17,383 ஆகும்.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 10,284 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தேங்காயின் விலை சடுதியாக அதிகரிப்பு



சந்தையில் தேங்காய் விலை உயர்ந்துள்ளதுடன், சில பிரதேசங்களில் ஒரு தேங்காய் 150 ரூபாவிற்கும் அதிக மாக விற்பனை செய்யப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, தேங்காய் விலை நாளுக்கு நாள் அதிக ரித்து வருவதாகவும் சில பகுதிகளில் வர்த்தக நிலையங் களில் 160 ரூபாவுக்கு தேங்காய்கள் கிடைக்கின்றன என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய நிலவரப்படி அடுத்த சில நாள்களில் தேங்காய் விலையில் எவ்விதக் குறைவும் ஏற்படாது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரசாரப்படுத்துகிறது. வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதும் இந்த சுயேச்சைக் குழு பெரிய மஞ்சள் நிற மாம்பழங்கள் சகிதம் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜாவை தேடிச் சென்று சந்தித்து அவரிடம் ஆசியை பெற்றுக் கொண்டது. அது பற்றிய படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

உண்மையில் அந்த சின்னத்தில் அந்தச் சுயேச்சைக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட சின்னம் மாம்பழம் அல்ல. மாங்காய். அப்படித்தான் சிங்களத்தில் அந்த சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழிலும் அந்தச் சின்னம் அப்படித்தான் – மாங்காய் என்றுதான் – சட்ட ரீதியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

மாங்காயை சின்னமாக பெற்றுவிட்டு மாம்பழத்துக்காக பிரச்சாரம் செய்கிறார்கள்.

கடந்த தடவை தேர்தலில் – அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் – யாழ். மாவட்டத்தில் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களிப்பதாக நினைத்துக் கொண்டு கால்குலேட்டருக்கு வாக்களித்த பெரும் எண்ணிக்கையானோரை அடையாளம் காண முடிந்தது.

ஆனாலும் மாங்காயைச் சின்னமாக கொண்டு அதற்கு பதிலாக மாம்பழத்தைக் காட்டிப் பிரச்சாரம் செய்தால் அது எடுபடுமா – அது சரியா – என்பது தெரியவில்லை.

---

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒக்டோபர் மாதம் முதல் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயற்பட்டு வந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் காலத்திலேயே இந்த விடுதி இப்படிப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுவின் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலக சுற்று நிருபத்தில் தெளிவாக விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இப்படி ஒரு தனிப்பட்ட அலுவலருக்கு அரச விடுதி வசதி வழங்குவது குறித்துக் குறிப்பிடப்படாத போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் இந்த விடுதி வசதி சட்டமுரணாக வழங்கப்பட்டுள்ளது.

சட்டமுரணாக இந்த விடுயைக் கிளிநொச்சி மாவட்டத்தின் அப்போதைய அரச அதிபரான திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்த விடுதியில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியாளரே தங்கியிருந்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளாக மாவட்ட செயலகத்தின் விடுதியில் தங்கியிருந்தமை மட்டுமன்றி அதற்கான வாடகைக் கொடுப்பனவு, மின்சாரக் கட்டணம் எவையும் அவரால் செலுத்தப்படவும் இல்லை.

வாடகையோ அல்லது மின்சாரக் கட்டணமோ செலுத்தாமல் தங்கியிருந்த விடுதியின் இரண்டு ஆண்டு கால மின்சாரக் கட்டணம் மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைப்பு அலுவலக செலவில் இருந்து கட்டப்பட்டுள்ளது என்று மாவட்ட செயலகம் எழுத்து மூலம் வழங்கிய தகவல் அறியும் சட்டத்தின் கீழான பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகத்தின் அரச விடுதியைசம்பந்தப்பட்டவருக்குவழங்க இணக்கம் தெரிவித்து 2020.11.10 அன்று அப்போதைய மாவட்ட அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் இணைப்பாளருக்கு வழங்கப்பட்டக் கடிதத்தில் விடுதிக்கான மின்சாரக் கட்டணத்தைத் தங்களால் நேரடியாகச் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020.11.10 ஆம் திகதிய இவ்வாறு மாவட்ட அரச அதிபர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளருக்கு விடுதியை வழங்குவதற்கான இணக்கக் கடிதத்தில் குறிப்பிட்டவாறான மின்சாரக் கட்டணம் அந்தக் கடித ஏற்பாட்டுக்கு மாறாக ஒருங்கிணைப்பு அலுவலக செலவில் இருந்து செலுத்தப்பட்ட காலத்திலும் அதே அரச அதிபரே பணியில் இருந்துள்ளார்.

இவற்றின் மூலம் இந்த விடுதிக்கான பொருளாதார வாடகை கணிப்பு மற்றும் மின்சாரக் கட்டணம் ஆகியவற்றுக்கு அரச பணம் வீணடிக்கப்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

---

## சகலருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. அதன்பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இந்தப் பகுதியில் எமக்கான ஆதரவாளர்கள் அதிகரித்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பலர் எம்முடன் இணைந்து போட்டியிட வந்தனர். மஸ்தான் வன்னியில் போட்டியிடக் கேட்டார். தானே பணத்தைச் செலவு செய்கின்றார் என்று சொன்னார். அதுபோல் அங்கஜன் இராமநாதனும் கோட்டார். அவருடைய தந்தையிடம் நாங்கள் மறுத்து விட்டோம். எமது கட்சிக்குக் கொள்கை உண்டு. அதன்படி பயணிப்போம்.

நாடாளுமன்றத் தேர்தலில் விருப்பு வாக்கு முறை இல்லை எனச் சிலர் போலிச் பிரசாரம் செய்கின்றார்கள். ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த திட்டம் அது. விகிதாசாரத் தேர்தல் முறையில் அது உள்ளது. அந்த முறையின் கீழ் நாம் போட்டியிடும்போது அதனை ஏற்கின்றோம். அந்த அடிப்படையிலேயே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்று ரில்வின் சில்வா தெரிவித்தமை தொடர்பாக நான் கேள்விப்படவில்லை. அவ்வாறான ஒரு கருத்தை ரில்வின் சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை.

உண்மையில் நாம் ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களுக்கு அரசியல், கலாசார அசாதாரணங்கள் இந்த நாட்டில் ஏற்பட்டமையை ஏற்றுக் கொள்கின்றோம்.

இலங்கையில் தேசிய ஒற்றுமை இல்லை என்ற பிரச்சினை உண்டு. ஆனால், கடந்த காலங்களில் நாம் சொன்னோம் எனப் பாரிய பொய்களைச் சொன்னார்கள். முஸ்லிம்கள் தாடி வளர்க்க முடியாது, பள்ளி செல்ல முடியாது என்றெல்லாம் சொன்னார்கள். நான் நினைக்கின்றேன் இந்தக் கருத்தும் அவ்வாறான ஒன்றாக இருந்திருக்கும் என்று.

இலங்கையில் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அது எமது கொள்கைகளிலும் ஒன்று. அடுத்து அனைவருக்குமான நீதி சமமானதாக இருக்க வேண்டும். புத்தகத்தில் மாத்திரம் அல்ல செயற்பாட்டிலும் அது இருக்க வேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசார உரிமைகள் ஒழுங்காகப் பாதுகாக்கப்படவில்லை அதை ஏற்றுக்கொள்கின்றோம். அதனைப் பாதுகாப்பதற்காகவே 13 ஆவது திருத்தம் இந்தியாவால் கொண்டு வரப்பட்டிருந்தாலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், தமிழ், முஸ்லிம் மக்கள் நினைக்கின்றார்கள் அந்தச் சீர்திருத்தம் மாத்திரம் இருந்தால் போதும் என்று.

ஆனால், நாங்கள் புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வருவோம். அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரைக்கும் மாகாண சபை முறைமையைப் பாதுகாப்போம். மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படும்.

கடக்கின்ற ஒரு வருடத்துக்குள் மிகச் சிறந்த விவாதங்களுக்குப் பின்னர் பலரது ஆலோசனைகளைப் பெற்று சரியான ஓர் அரசமைப்பு முறையை இந்த நாட்டில் உருவாக்குவோம். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் மற்றும் திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக தற்போதே விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

தராகி சிவராம் கொலை தொடர்பான விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வந்து 3 வாரங்களே ஆகுகின்றன. எனினும் இதற்கான விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்துள்ளார்.” – என்றார்.

---

## தம்பலகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவத்தில் தம்பலகாமம், கோயிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கந்தசாமி பேரின்பராசா (வயது 35) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு நண்பர்களுக்கிடையில் குடிபோதையில் வாய்த்தகராறு ஏற்பட்ட நிலையில் அது கைகலப்பாக மாறி இடம்பெற்ற தாக்குதலில் படுகாயமடைந்த மேற்படி நபர், தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை மாலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய தம்பலகாமம், கோயிலடிப் பகுதியைச் சேர்ந்த 22, 36 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.




# லஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு பொதுமக்களிடமிருந்து 3,045 முறைப்பாடுகள்

லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை 3,045 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த வருடத்தின் செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் மேற்படி முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றுள் 811 முறைப்பாடுகளை விசாரணை செய்யுமாறு லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளதுடன் சுற்றிவளைப்பில் 67 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் 20 பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குகின்றனர்.

கிடைத்த 620 முறைப்பாடுகள் லஞ்ச ஊழல் சட்டத்திற்கு புறம்பான வகையில் அமைந்துள்ளதால் அவை குறித்த நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

# குண்டசாலை கெஹெலிய ரம்புக்வெல்ல ஆரம்ப பாடசாலையின் பெயர் மாற்றம்




கண்டி – வத்தேகம வலயக் கல்வி பணிமனைக்கு உட்பட்ட குண்டசாலை கெஹெலிய ரம்புக்வெல்ல மாதிரி ஆரம்ப பாடசாலையின் பெயரை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர், பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன் தெரிவித்துள்ளார்.

மாகாண கல்வித் திணைக்களத்தினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்தப் பாடசாலை எதிர்வரும் காலத்தில் குண்டசாலை ரோயல் ஆரம்ப பாடசாலை என அழைக்கப்படவுள்ளது.

# பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு லஞ்சம் வழங்க முற்பட்டவர் கைது

மட்டக்குளி பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு லஞ்சம் வழங்க முயற்சித்த போதைப்பொருள் கடத்தல்காரர் லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளி பகுதியில் போதைப்பொருள் வர்த்தகத்தை மேற்கொள்ள இடமளிக்குமாறு கோரி சந்தேகநபர் 50,000 ரூபாவை இலஞ்சமாக வழங்க முற்பட்டுள்ளார்.

பொலிஸார் வழங்கிய தகவலுக்கு அமைய, மேற்படி பணத்தை வழங்க முற்பட்ட வேளையில் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மட்டக்குளியைச் சேர்ந்த 44 வயதான சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.







# யாழ். வணிகர் கழகத்தினரை நேற்று சந்தித்த சங்கின் பெண் வேட்பாளர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெண் வேட்பாளர்கள் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிடும் வன்னி மாவட்ட வேட்பாளரான முன்னாள் போராளி கருணாநிதி யசோதினி, யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் ஆகியோர் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெண் வேட்பாளரின் முக்கியத்துவம், பெண்களை அரசியலில் ஈடுபடுத்துவதன் நோக்கம் மற்றும் பெண்கள் ஏன் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பவை பற்றி கலந்துரையாடப்பட்டன.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் உறுப்பினர்கள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவாளர்கள், போராளிகள் நலம்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் குழுமத்தினர் மற்றும் முன்னாள் போராளிகள் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கூட்டின் மகாத்மியம்

இலங்கையில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால், சிறுபான்மையினர் குறித்து - குறிப்பாகத் தமிழர்கள் குறித்து - பொய்யும் புரட்டும் புனைகதையும் பேசுவதுதான் ஆட்சித் தரப்பினரின் பொறுப்பு என்றாகி விட்டது போலும்.

அதிகாரத்துக்கு வந்ததும் சிறுபான்மையினர் தொடர்பான விடயங்களில் புரட்டப் பேசுவதுதான் தங்கள் கடப்பாடு என்று அதிகாரத் தரப்பினர் எப்போதும் நினைத்துக் கொள்வது இப்போதும் மாறவில்லை.

புதிதாக ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியினரும் இதற்கு விதிவிலக்கல்லர். இதனை அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆட்சித் தரப்பின் முக்கிய பிரமுகருமான பிமல் ரத்நாயக்காவே உறுதிப்படுத்தி இருக்கின்றார்.

நேற்று வவுனியாவுக்கு வருகை தந்த அவர், அங்கு தமிழ் ஊடகவியலாளர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்கு சோற்றுக்குள் முழுப் பூசணிக்காயைப் புதைப்பது போல பதில் கூறி இருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதான பங்காளிக் கட்சி. ஜனதா விமுக்தி பெரமுனை எனப்படும் ஜே.வி.பி. அதன் செயலாளர் ரில்வின் சில்வா. இப்போதைய அரசில் காத்திரமான பங்களிப்பை வழங்கும் முக்கிய பிரமுகர் அவர். சில தினங்களுக்கு முன்னர் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை குறித்து வடக்கு, கிழக்கு மக்களின் அதிகாரப் பகிர்வு கோரிக்கை தொடர்பில், பகிரங்கக் கருத்துக்களை வெளியிட்டு இருக்கின்றார் அவர்.

“13 ஆவது திருத்தச் சட்டமும் அதிகாரப்பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல, அவர்களுக்கு அவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வே அவசியமாக உள்ளது. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இந்த விடயங்களை பயன்படுத்தி வருகின்றனர்” - என்று தாம் ஏதோ புதிய அரசியல் கண்டுபிடிப்பை கண்டுபிடித்தவர் மாதிரி ரில்வின் சிலவா பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். கொழும்பிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு தாம் அளித்த பேட்டியிலேயே அவர் இவ்விடயங்களைத் திட்டவட்டமாகவும் உறுதியாகவும் கூறி இருக்கிறார்.

ஆனால் நேற்று வவுனியாவுக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசின் முக்கிய பிரமுகரான பிமல் ரத்நாயக்க, அத்தகைய கருத்து எதையும் ரில்வின் சில்வா தெரிவித்தார் எனத் தாம் அறியவில்லை என்று வவுனியா செய்தியாளர்கள் மத்தியில் கயிறு விட்டிருக்கின்றார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக ரில்வின் சில்வா ஓர் அறிக்கை வெளியிட்டார் என்று கூறப்படுகின்றது.

ஆனால் “நான் அதைக் கேள்விப்படவில்லை. அவ்வாறான ஒரு கருத்தை ரில்வின்

சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை...!”என்றெல்லாம் கதை விட்டிருக்கிறார் பிமல் ரத்நாயக்கா.

மேற்படி தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் அல்ல என்ற சாரப்பட ரில்வின் சில்வா அளித்த பேட்டி சமூக ஊடகங்களில் மிகத் தாராளமாக உலா வருகின்றது. ஊடகங்களில் அது பற்றிய செய்திகள் விலாவாரியாக வெளிவந்துள்ளன.

அப்படி இருக்கையில் அத்தகைய அறிவிப்புக் குறித்துத்தான் அறியவே இல்லை என்ற சாரப்பட, அதுவும் ரில்வின் சில்வா அத்தகைய கருத்தை கூறியிருக்க மாட்டார் என்று உறுதிப்படுத்தும் விதத்தில், விமல் இரட்நாயக்கா பேசுவது உண்மையை மூடி மறைக்கும் அப்பட்டமான அரசியல் சின்னத்தனம் அன்றி வேறில்லை.

ரில்வின் சில்வா பேசிய விடயங்களை கவனத்தில் எடுத்து, அது தவறு என்பதை அவருக்கும் ஏனைய நாட்டு மக்களுக்கும் உறைக்கும் விதத்தில் உரைக்க தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து அப்படி ரில்வின்சில்வா கூறவில்லை என்று தேசிய மக்கள் சக்தி அரசின் முக்கிய பிரமுகர்கள் பித்தலாட்டம் செய்வது, அந்த அரசின் மீது தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச மரியாதையை நம்பிக்கையையும் தகர்த்து விடும் என்பதை தேசிய மக்கள் சக்தியினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# பிரதமர் மோடி முன்னிலையில் ஹரியானாவின் முதல்வராக பதவியேற்றார் நயாப் சிங் சைனி



பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில், ஹரியானா முதல்வராக நயாப் சிங் சைனி பதவியேற்றார். ஹரியானா சட்டப்பேரவைக்கு கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள 90 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 48 தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றியது.

இந்த தேர்தலில் முதல்வர் வேட்பாளர் முன்கூட்டியே அறிவிக்கப்படாவிட்டாலும், முதல்வர் முகமாக நயாப் சிங் சைனி கருதப்பட்டார். இம்மாநிலத்தில் கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் நிலையில், கருத்துக்கணிப்புகளை பொய்யாக்கி 3 ஆவது முறையாக அக்கட்சி வெற்றி பெற்றது.

இதையடுத்து, ஹரியானாவில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்கள் மற்றும் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் கூட்டம் பஞ்ச்குலாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கட்சியின் மத்திய பார்வையாளர்களாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவ் ஆகியோர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில், பா.ஜ.க. சட்டமன்றக் கட்சியின் தலைவராக நயாப் சிங் சைனி தேர்வு செய்யப்பட்டார் என அமித் ஷா அறிவித்தார்.

இதையடுத்து, ஹரியானா முதல்வராக நயாப் சிங் சைனி நேற்று பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் பண்டாரு தத்தாத்ரேயா பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். அவரோடு, அனில் விஜ், கிரிஷன் லால் பன்வார், ராவ் நர்பீர் சிங் உள்ளிட்டோர் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்த விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பா.ஜ.க. தலைவர் மற்றும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா, மத்திய சாலை போக்குவரத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல்வர்கள் அஜித் பவார், தேவேந்திர பட்னவிஸ், குஜராத் முதல்வர் பூபேந்திர சிங் படேல், ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு, மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவ் உள்பட தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த 18 முதல்வர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மகாராஷ்டிரா மற்றும் ஜார்க்கண்ட் சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பலத்தை வெளிப்படுத்தும் விதமாக இந்த விழா நடைபெற்றது.

54 வயதாகும் நயாப் சிங் சைனி, ஹரியானா பா.ஜ.க. மூத்த தலைவர் மனோகர் லால் கட்டாரால் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்தவர். கடந்த 30 ஆண்டுகளாக அவர் பா.ஜ.கவில் பயணித்து வருகிறார். முதன்முதலில் 2014 இல் நரேன்கர் தொகுதியில் போட்டியிட்டு சட்டப்பேரவை உறுப்பினராக வெற்றி பெற்ற நயாப் சிங் சைனி, 2016 இல் மாநில அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார்.

2019 மக்களவைத் தேர்தலில் குருஷேத்ரா தொகுதியில் போட்டியிட்ட இவர், காங்கிரஸ் கட்சியின் நிர்மல் சிங்கை கணிசமான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இதையடுத்தே இவர் பிரபலமானார். ஹரியானா முதல்வராக இருந்த மனோகர் லால் கட்டார் அப்பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டதை அடுத்து மாநிலத்தின் முதல்வராக கடந்த மார்ச் மாதம் பதவியேற்றார் நயாப் சிங் சைனி.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது கட்சியின் முக்கிய முகமாகவும், முதல்வராகவும் இருந்து செயல்பட்ட நயாப் சிங் சைனி, கருத்துக்கணிப்புகளைப் பொய்யாக்கி கட்சிக்கு வெற்றியைத் தேடித்தந்தார்.

இந்த தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என கருத்துக்கணிப்புகள் தெரிவித்த நிலையில், அக்கட்சி 37 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

அதோடு, பிரதான மாநில கட்சியாக அறியப்பட்ட ஜனநாயக் ஜனதா கட்சியும், ஆம் ஆத்மி கட்சியும் இந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஒரு காலத்தில் வலிமைமிக்க அரசியல் சக்தியாக இருந்த இந்திய தேசிய லோக் தளம், இம்முறை வெறும் இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

எதிர்க்கட்சிகளின் வெற்றிவாய்ப்பை தடுத்து நிறுத்தி, பா.ஜ.கவை வெற்றி பெறச் செய்ததில் நயாப் சிங் சைனி முக்கிய பங்கு வகித்தார் என கூறப்படுகிறது.

# சல்மான் கானை கொலைசெய்ய சதி: ஹரியானாவை சேர்ந்த ஒருவர் கைது



நடிகர் சல்மான்கானை கொலை செய்ய முயன்ற வழக்கில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவரை நவி மும்பை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுகா என்ற அந்த நபர், ஹரியானாவின் பானிபட்டில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். அவர் நவி மும்பைக்கு அழைத்து வரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவி மும்பையின் பான்வேல்லில் உள்ள நடிகர் சல்மான் கானின் பண்ணை வீட்டுக்குச் செல்லும் வழியில் அவரைக் கொலை செய்வதற்காக கடந்த ஜூன் மாதத்தில் நடந்த சதி முறியடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். கடந்த ஏப்ரல் மாதம் பந்த்ராவில் உள்ள சல்மான்கானின் வீட்டுக்கு முன்பு நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தினைத் தொடர்ந்து இந்தச் சதி சம்பவம் நடந்தது.

ஹரியானாவைச் சேர்ந்த பிரபல ரவுடியான லாரன்ஸ் பிஷ்னோய் கும்பல், தன்னையும் தன் குடும்பத்தினரையும் கொலை செய்யும் நோக்கத்துடன் தனது வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இந்த ஆண்டு தொடக்கத்தில் சல்மான் கான் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

கடந்த ஜனவரி மாதத்தில், அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் போலி அடையாளங்களைப் பயன்படுத்தி பன்வாலில் உள்ள தனது பண்ணை வீட்டில் அத்துமீறி நுழைந்தனர் எனவும் சல்மான் கான் தெரிவித்திருந்தார்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மும்பை பொலிஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையின் ஒரு பகுதியாக சல்மான் கானின் இந்த வாக்குமூலம் இடம் பெற்றுள்ளது.

லாரன்ஸ் பிஷ்னோய் மற்றும் நேஹ்ரா கும்பல்கள், சல்மான் கானை வேவு பார்க்கும் நோக்கத்துடன் அவரின் பந்த்ரா இல்லம், பான்வேல் பண்ணை வீடு மற்றும் படப்பிடிப்பு தளங்களில் அவரின் நடமாட்டத்தை கண்காணிக்க 60 - 70 பேரை களமிறக்கியுள்ளதாக பொலிஸ் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சல்மான் கானை கொலை செய்ய சதி திட்டம் தீட்டப்பட்டிருப்பது குறித்த தகவல் வெளியானதைத் தொடர்ந்து ஏப்ரல் 24 ஆம் திகதி பான்வேல் காவல்நிலையத்தில் பலர் மீது வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதி உடனடியாக நிறுத்தப்படுகிறது

## இத்தாலி பிரதமர் அறிவிப்பு

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வது உடனடியாக நிறுத்தப்படும் என இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி அறிவித்துள்ளார்

அமெரிக்கா உள்ளிட்ட நட்பு நாடுகளின் ஆதரவுடன் இஸ்ரேல் இராணுவம் போர் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இத்தாலி காணப்படுகிறது.

இந்நிலையில், காசா பகுதியில் போர் நீட்டிப்பை தொடர்ந்து, இத்தாலியில் இருந்து இஸ்ரேலுக்கு இராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்வதற்கான அனைத்து புதிய உரிமங்களுக்கும் உடனடியாக நிறுத்தப்படுகிறது என இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரான் மீதான எதிர்த் தாக்குதலை மட்டுப் படுத்துவதாக இஸ்ரேல் அமெரிக்காவிற்கு உறுதியளித்துள்ளது.

அதன் படி, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உட்பட இஸ்ரேலிய அதிகாரிகள், ஈரான் மீதான எதிர்த் தாக்குதல் எண்ணெய் அல்லது அணுசக்தி நிலையங்களுக்குப் பதிலாக இராணுவ இலக்குகளுக்கு மட்டுப்படுத்தப்படும் என்று அமெரிக்காவிற்கு உறுதியளித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து, நெதன்யாகுவின் அலுவலகம் வெளியிட்டிருந்த எக்ஸ் பதிவில்,

”நாங்கள் அமெரிக்காவின் கருத்துக்களைக் கேட்கிறோம், ஆனால் எங்கள் தேசிய நலன்களின் அடிப்படையில் எங்கள் இறுதி முடிவுகளை எடுப்போம்.” குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ் அமைப்பினர் மீது போரை தொடங்கியது. இதில் 40 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இதுவரை உயிரிழந்த நிலையில் ஒரு ஆண்டை கடந்தும் போர் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வது உடனடியாக நிறுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.










# ஷேக் ஹசீனா உள்ளிட்ட 45 பேருக்கு எதிராக பங்களாதேஷ் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு



பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பங்களாதேஷில் கடந்த ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற மாணவர் போராட்டத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக அந்நாட்டு நீதிமன்றம் அவருக்கு இந்த பிடியாணையைப் பிறப்பித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஷேக் ஹசீனாவின் கட்சியைச் சேர்ந்த பொதுச் செயலாளர் மற்றும் ஹசீனாவின் அரசியல் கட்சியின் ஏனைய உயர்மட்டத் தலைவர்கள் உள்ளிட்ட 45 பேருக்கு எதிராகவும் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஷேக் ஹசீனாவை நவம்பர் 18 ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# நைஜீரியா எரிபொருள் தாங்கி வெடிப்பு; உயிரிழப்பு எண்ணிக்கை 147 ஆக உயர்வு

நைஜீரியாவின் வட மேற்கு பகுதியில் எரிபொருள் தாங்கிக் கொள்கலன் வெடித்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 147 ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்தில் பலர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த எரிபொருள் கொள்கலன் தாங்கி ஊர்தி வீதியை விட்டு விலகியதில் அந்த எரிபொருள் கொள்கலன் வெடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து, அந்த கொள்கலனிலிருந்து எரிபொருளைச் சேகரிக்கப் பெருந்திரளான மக்கள் ஒன்று கூடியுள்ளனர்.

இதன்போது, அந்த எரிபொருள் தாங்கி வெடித்ததைத் தொடர்ந்து எரிபொருளை சேகரிக்க முயன்ற பலர் உயிரிழந்தனர்.









# ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் வேட்பாளரின் வாகனம் மீது தாக்குதல்!






**(பழுவூரான்)**

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பாலசுந்தரம் சிறிபாலன் மீது இனந்தெரியாதோர் நேற்று இரவு 6.35 மணியளவில் மேற்கொண்ட கல்வீச்சினால் அவரது காரின் கண்ணாடி உடைவடைந்தது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள் ஆயித்தியமலையில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, அதனை நிறைவு செய்த பின்னர் நொச்சிமுனையிலுள்ள தமது வீடு நோக்கிக் காரில் பயணிக்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, அவர்கள் காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு





**(எஸ்.கீதபொன்கலன்)**

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பேட்ரிக் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

புதிய ஆளுநருக்கு முதலில் வாழ்த்து தெரிவித்த பிரித்தானிய உயர்ஸ்தானிகர், கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு பிரித்தானிய அரசாங்கத்தின் அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாகச் செயற்படவும், சுகாதாரம், கல்வி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறைகளின் அபிவிருத்திக்காக முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய மூவினத்தவர்களும் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்றனர். இவ் மக்களின் தேவைகளை செவிமடுத்து, கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வைக் காண எதிர்பார்ப்பதாக ஆளுநர் உயர்ஸ்தானிகருக்கு கூறினார்.

இதன்போது பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கூறுகையில், பிரித்தானிய அரசாங்கம் மிகவும் நம்பிக்கையுடனும், தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நிர்வாகத்தை மிகவும் பாராட்டுவதாகவும் மேலும் எதிர்காலத்தில் இலங்கை அரசு மற்றும் கிழக்கு மாகாண அரச நிர்வாகம் என்பவற்றுடன் மிகவும் இணக்கமாக செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் வருகையை நினைவுகூர்ந்து ஆளுநரும் ஸ்தானிகரும் தமக்கிடையில் நினைவுப் பரிசுகளை பரிமாறிக் கொண்டனர்.




# 9 வருடங்களின் பின்பு மேற்கிந்தியத் தீவுகளை வென்று இருபதுக்கு 20 தொடரை கைப்பற்றியது இலங்கை அணி

9 வருடங்களின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகளை சர்வ தேச இருபதுக்கு2 0 கிரிக்கெட் தொடரில் வெற்றிகொண்ட பெருமையை இலங்கை அணி பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக் கிடையில் 2015 ஆம் ஆண்டு முதல் சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் நடைபெற்றுள்ளதுடன் அவற்றில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 தொடர்களை வென்றுள் ளதுடன் ஒரு தொடர் 1-1 என சமநிலையில் முடிந்துள்ளது.

இந்நிலையில், இவ்வருட தொடரில் முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளும் 2 ஆவது போட்டியில் இலங்கையும் வெற்றிபெற்றதால் 3 ஆவது போட்டி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்திருந்தது.

தம்புளை சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 162 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் ரொவ்மன் பவல் 37 ஓட்டங்களையும் குடாகெஸ் மொட்டி 32 ஓட்டங்களையும் பிரென்டன் கிங் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

மஹீஸ் தீக்ஷன, வனிந்து அசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

163 ஓட்டங்களை நோக்கி பதிலளித்தாடிய இலங்கை அணிக்கு பெத்தும் நிஸ்ஸங்க – குசல் மெண்டிஸ் ஜோடி 5.2 ஓவர்களில் 60 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத் தைப் பெற்றுக்கொடுத்தது.

பெத்தும் நிஸ்ஸங்க 22 பந்துகளில் ஒரு சிக்ஸர், 7 பௌண்ட ரிகளுடன் 39 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

எனினும், அடுத்து இணைந்த குசல் மெண்டிஸ் – குசல் ஜனித் பெரேரா ஜோடி வீழ்த்தப்படாத 2 ஆம் விக்கெட்டுக்காக 106 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் வெற்றியை உறுதி செய்தது.

குசல் மெண்டிஸ் 50 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பௌண்டரிகளுடன் 68 ஓட்டங்களையும் குசல் ஜனித் பெரேரா 36 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் 55 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கை அணி 18 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதை குசல் மெண்டிஸ் சுவீகரிக்கு தொடரின் சிறந்த வீரர் விருதை பெத்தும் நிஸ் ஸங்க தன்வசப்படுத்தினார்.

இந்த வெற்றிக்கு அமைவாக மேற்கிந்தியத் தீவுக ளுக்கு எதிரான சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் வரலாற்றில் இலங்கை 9 வருடங்களின் பின்னர் தனது முதல் தொடர் வெற்றியை பதிவுசெய்தது.








# இன்றைய ராசி பலன்கள் -18.10.2024

## மேஷம்

இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சி யில்கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்க ளுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தேவையற்ற மன உளைச்சல் காரணமாக இன்று தலைவலி மற்றும் காய்ச்சல் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

## ரிஷபம்

இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.உன்கள் துணையை நட்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.

என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது என் னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக் கியத்தை பராமரிக்க உதவும்.

## மிதுனம்

சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச் சியும் திருப்தியும் உங்கள் முன் னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப் பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வ தற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## கடகம்

நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண் டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படை யும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். சளி மற்றும் நரம்பு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## சிம்மம்

சில சமயங்களில் அமைதியின் மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமை யான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தரு ணங்களை சந்திக்க நேரும்.

சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வ தன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## கன்னி

உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக் கும். நீங்கள் உங்கள் நடவடிக்கை களை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆத ரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல் வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுப வித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற் பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.

## துலாம்

பிரார்த்தனை மற்றும் இறை வழி பாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற் கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்ட மிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

## விருச்சிகம்

இன்று உறுதியுடன் இருக்க வேண் டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நட வடிக்கையையும் கவனமாக ஆற்றி னால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணி யாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் -18.10.2024




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்தியம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.




